# புதுச்சேரி அரசு
# பள்ளிக் கல்வி இயக்ககம்

மேல்நிலைப்பொதுத்தேர்வு, மார்ச்2017

மதிப்பெண் சான்றிதழ்களில் மாணாக்கரின்தமிழ்ப்பெயரில் திருத்தங்கள்
மேற்கொள்வது தொடர்பான

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற மார்ச் 2017, மேல்நிலைப் பொதுத் தேர்வெழுதிய மாணாக்கருக்கு 10.07.2017 அன்று அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டது. மதிப்பெண் சான்றிதழ்களில் மாணாக்கரின் பெயர் முதன்முறையாக தமிழ்மொழியில் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

மதிப்பெண் சான்றிதழ்களில் சில மாணாக்கருக்கு தமிழ்மொழியில் பதியப்பட்ட பெயரில் தவறான பதிவுகள் உள்ளதாக தேர்வுத் துறையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதன் காரணமாக, மதிப்பெண் சான்றிதழ்களில் தமிழ்ப் பெயரில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

அதன்படி, தமிழ்ப் பெயரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாணாக்கருக்கு 19.07.2017 முதல் 24.07.2017 வரை வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணாக்கர் தாங்கள் பயின்ற பள்ளிகளுக்கு நேரில் சென்று, தமிழ்ப் பெயரில் திருத்தம் கோரும் கோரிக்கைக் கடிதத்தினை பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அளிக்க வேண்டும்.

திருத்தங்கள் கோரும் மாணாக்கரிடமிருந்து மேற்படி விண்ணப்பத்தினைப் பெறவும், திருத்தங்களை இணையத்தின்வழியாக மேற்கொண்டு அரசுத் தேர்வுத் துறைக்கு அனுப்பவும், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு உரிய முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெயரில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பெண் சான்றிதழ்களை 31.07.2017 அன்று முதல் தாங்கள் பயின்ற பள்ளிகளுக்குச் சென்று பெற்றுக் கொள்ளலாம். புதிய மதிப்பெண் சான்றிதழினை பெறும்பொழுது மாணாக்கர் ஏற்கனவே பெற்ற பழைய அசல் மதிப்பெண் சான்றிதழினை பள்ளிகளில் ஒப்படைக்க வேண்டும்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஜெ. கிருஷ்ணராஜூ)
இணை இயக்குநர்